# Bharathi's Metaphysical Experience

**Dr. K. Pritha**
*Head, Department of Languages*
*Chevalier T. Thomas Elizabeth College for Women, Perambur, Chennai*

**Abstract**
*This paper explores the metaphysical experiences of Mahakavi Subramania Bharathi through his encounters with three great saints—Kullachami, Govindasami, and Yazhpanathasami. Bharathi, known not only as a nationalist poet but also as a seeker of truth, integrated spiritual insights with his poetic genius. His verses reflect Vedantic wisdom, yogic practices, and a universal religion of love that transcends sectarian boundaries. The study highlights how Bharathi's association with enlightened sages deepened his spiritual vision, enriched his poetry, and offered humanity a message of liberation through love, knowledge, and devotion.*

***Keywords:*** *Mahakavi Bharathiyar, Kullachami, Govindasami, Yalppanathuchami, Meyyiyal, Anbu.*

**References**
1. Mahakavi Bharathiyar's Poems, Editor: Vi. Ramanathan, Fourth Edition, November 1992, Hindu Publications, Muthukrishnan Street, Thyagaraya Nagar, Chennai.
2. Thayumanavar's Sacred Hymns, Commentator: Professor A. Manikkam, First Edition, July 1999, Varthamanan Publishing House, 21, Ramakrishna Street, Thyagaraya Nagar, Chennai.

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255954

# பாரதியின் மெய்யியல் அனுபவம்

***முனைவர் க. பிரீதா***
மொழித்துறைத் தலைவர்
செவாலியர் டி.தாமஸ் எலிசபத் மகளிர் கல்லூரி, பெரம்பூர், சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*இந்த ஆய்வு கட்டுரை மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் மெய்யியல் அனுபவங்களை ஆராய்கிறது. குள்ளச்சாமி, கோவிந்தசாமி, யாழ்ப்பாணத்துச் சாமி ஆகிய மூன்று ஞானிகளின் தரிசனங்கள் பாரதியின் ஆன்மிகப் பயணத்தை வளப்படுத்தின. வேதாந்த ஞானம், யோகப் பாவனைகள், சமயங்களைத் தாண்டிய அன்பு மதம் ஆகியவற்றை அவர் கவிதைகளில் வெளிப்படுத்தினார். இவ்வாய்வு பாரதி அடைந்த ஞான அனுபவங்கள் கவிதைகளில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதையும் அவை மனிதகுலத்திற்கு விடுதலை, அன்பு, ஞானம் எனும் உயரிய செய்தியை எவ்வாறு வழங்குகின்றன என்பதையும் விளக்குகிறது.*
***திறவுச்சொற்கள்:*** *மகாகவி பாரதியார், குள்ளச்சாமி, கோவிந்தசாமி, யாழ்ப்பாணத்துச்சாமி, மெய்யியல், அன்பு*

## முன்னுரை

மகாகவி பாரதியார் தேசியக் கவி என்று பலராலும் பாராட்டப்படுகின்றார். அவர் தோன்றிய காலம் பாரதநாடு பரங்கியரிடம் அடிமைப்பட்டிருந்த காலமாகும். பாரதி விடுதலையுணர்வைத் தூண்டும் கவிதைகளைப் பாடியதோடு மட்டுமல்லாமல் தெய்வம், தமிழ் மொழி, சமுதாயம் குறித்த கவிதைகளையும் பாடியுள்ளார். முப்பெரும் காவியங்களான கண்ணன்பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு ஆகிய உயரிய படைப்புக்களையும் வழங்கியுள்ளார். தெய்விகப்பாடல்களைப் பொருத்தமட்டில் காளி, திருமால், சிவன், முருகன், கர்த்தர், அல்லாஹ் முதலிய பல சமயக் கடவுள்களையும் துதித்துப் பாடியுள்ளார். அவருடைய வழிபாட்டுணர்வு சமயங்களைக் கடந்ததாய் இருந்தது. வேதாந்தத் தத்து வங்களையும் யோக நிலைகளையும் பற்றிப் பாரதி நன்கு அறிந்திருந்தார். புதுவையில் வாழ்ந்த குள்ளச்சாமி என்னும் மெய்ஞ் ஞானியைக் குறித்தும் கோவிந்தசாமி யென்னும் யோக சித்தரைக் குறித்தும் யாழ்ப்பாணத்துச் சாமியெனும் ஞானியைக் குறித்து மகாகவி பாரதி பாடி வைத்துள்ள கவிதைகள் அந்த மகான்களிடமிருந்து பாரதி கற்ற மெய்யியல் அனுபவங்களைக் காட்சிப் படுத்துவனவாய் உள்ளன. தத்துவ அறிவு என்பது வேறு. தத்துவ அனுபவம் என்பது வேறு. இந்த இரண்டையும் யுகக் கவிஞர் பாரதி பெற்றிருந்தார் என்றால் அது மிகையாகாது. மேற்கண்ட மூவரிடமிருந்தும் பாரதி பெற்ற ஞான அனுபவங்களை இவ்வாய்வுக் கட்டுரை விளக்க முற்படுகின்றது.

## அன்பு மதம்

உலகத்து ஞானப்பெருமக்கள் சமய மதங்களை நிறுவிக் கொள்கைகளையுண்டாக்கி அவர் தம் கொள்கைகளுக்கு ஏற்பத் தெய்வ வடிவங்களைப் படைத்தனர். அச்சமய மதங்களைக் கடைப்பிடிக்கும் பெரிய, சிறிய குழுக்கள் என்றுமே உலகில் இருந்து வருகின்றன. இச்சமய மதங்களுக்குள் அன்பு என்னும் தெய்வப்பண்பும் ஊடாடுவதைக் காண முடியும். அத்தெய்வங்களையெல்லாம் தமது கவிதையில்

பாடி வைத்த பாரதி புதிய மதமொன்றைப் படைத்துக் காட்டுகின்றார். அது புவியனைத்துக்கும் பொதுவானதாக உயிர்க்குலம் அனைத்தையும் ஒருங்கிணைப்பதாக உள்ளது. அதன் பெயர் தான் “அன்பு மதம்’. இந்த உலகத்தில் மரம் செடி கொடிகளாகிய இயற்கைத் தாவரங்கள் எல்லாமும் எந்தத் தொழிலைச் செய்து பிழைப்பு நடத்துகின்றன. வானம் பொழியுமானால் அவை வளர்ந்து செழிக்கின்றன. ஆகவே மனிதர்கள் யாரும் நிலத்தை உழ வேண்டியதில்லை. விதை ஊன்ற வேண்டியது இல்லை வரப்பு கட்ட வேண்டியதில்லை. எல்லோரும் அன்பு செய்தல் ஒன்றையே தொழிலாகக் கொள்ளுங்கள் எனப் போதிக்கும் அன்பு மதத்தை நிறுவுகின்றார் பாரதி.

**யானெதற்கும் அஞ்சுகிலேன், மானுடரே நீவீர்**
**என்மதத்தைக் கைக்கொண்மின் பாடுபடல் வேண்டா**
**ஊனுடலை வருத்தாதீர் உணவியற்கை கொடுக்கும்**
**உங்களுக்குத் தொழிலிங்கே அன்புசெய்தல் கண்பீர்.**

எனப் பாடுகின்றார். பாரதியின் இந்த அன்பு மதம் பாருலகின் சமய மதங்கள் அனைத்தும் உளம் கனிந்து கொண்டாடித் துதிக்கும் உன்னத மதமாக விளங்குகின்றது. உயிர்கள் அன்பு செய்வதையே தொழிலாகக் கொண்டதால் எந்த ஏற்றத்தாழ்வுகளுக்கும், பேதப் பிணக்குகளுக்கும் இடமே இல்லாமல் போகும்.

**தேசிகன் குள்ளச்சாமி**

அன்பு மதத்தை வழங்கிய பாரதி அன்புப் பூத்த நெஞ்சுடையவராக விளங்குகின்றார். அதனால் தான் ஞானச் செல்வர்களிடம் உறவாடும் பாக்கியம் பாரதியாருக்குக் கிட்டியது. புதுவை நகரில் மாங்கொட்டைச் சாமி எனவும் குள்ளச்சாமி எனவும் பொது மக்களால் அழைக்கப்பட்ட ஞானி ஒருவர் இருந்தார். அவரைத் தரிசிக்கும் வாய்ப்பு பாரதிக்கு அமைந்தது. புதுவையில் தர்மராஜா தெருவில் இராஜாஇராமன் என்னும் பெயரில் ஓர் அந்தணர் வாழ்ந்து வந்தார். அவர் தமது தந்தையார் எழுதி வைத்த உபநிடதத் தமிழ் நூலைத் திருத்தித் தரும்படி பாரதியைக் கேட்டுக்கொண்டார். திருத்தப் பணிக்காக பாரதியார் இராஜாராம் வீட்டிற்குச் சென்றார். அங்குக் குள்ளச்சாமி வரக் கண்டு அவர் கையை பற்றிக் கொண்டு “உம்மை ஞானி என்றும் சித்தரென்றும் ஊரார் கூறுகிறார்கள். உம்முடைய உண்மை நிலையை என்னிடம் மறைக்காமல் கூறவேண்டும்”. என்று பாரதியார் கேட்டுக் கொண்டார். உடனே குள்ளச்சாமி பாரதியின் கைகளை விடுவித்துக் கொண்டு இராஜராமனின் வீட்டுக் கொல்லைப் புறத்திற்கு ஓடினார். பின்தொடர்ந்து சென்ற பாரதி குள்ளச்சாமியைத் தடுத்து நிறுத்தினார். கொல்லைப்புறத்திற்கு அப்பால் இடிந்த வீட்டுச்சுவர் ஒன்று இருந்தது. கொல்லையில் கிணறு ஒன்றும் இருந்தது. குள்ளச்சாமி பாரதிக்கு அந்தக் குட்டிச் சுவரை காட்டி வானத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்த சூரியனையும் காட்டி சூரியனின் பிம்பம் கிணற்றில் தெரிவதையும் காட்டி புரிகிறதா என்று கேட்டார் உடனே பாரதி புரிந்து கொண்டேன் என்று மகிழ்ச்சியுடன் உரைத்தார். பாரதி அடைந்த அனுபவ ஞானத்தை அழகு தமிழ்க்கவிதை வாயிலாக எடுத்துரைக்கின்றார்.

**தேசிகன்கை காட்டியெனக் குரைத்த செய்தி**
**செந்தமிழில் உலகத்தார்க் குணர்த்து கின்றேன்**
**வாசியைநீ கும்பகத்தால் வலியக் கட்டி**
**மண்போலே சுவர்போலே வாழ்தல் வேண்டும்**
**தேசுடைய பரிதியுருக் கிணற்றி னுள்ளே**
**தெரிவதுபோல் உனக்குள்ளே சிவனைக் காண்பாய்**
**பேசுவதில் பயனில்லை அனுப வத்தால்**
**பேரின்பம் எய்துவதே ஞானம் என்றான்**

நாம் உள்ளிழுக்கும் மூச்சுக்காற்றுக்கு "பூரகம்" என்று பெயர். வெளி விடுவது "இரேசகம்" ஆகும். இது ஒவ்வொருவருக்கும் இயல்பாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. உள்ளிழுக்கும் மூச்சை வெளிவிடாமல் உள்ளேயே இயங்க வைப்பது "கும்பகம்" ஆகும்.

"வாசி" என்பது மூச்சுக்காற்று மட்டுமல்ல. உள்ளே கும்பித்த காற்றை, ஆறு ஆதாரங்களில் அடிப்படை ஆதாரமான மூலாதாரத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். மூலாதாரம் என்பது மனிதரின் எருவாய்க்கும் கருவாய்க்கும் மேலே ஒன்றரை அங்குல உயரத்தில் அமைந்த பகுதியாகும். மூலாதாரத்தில் குண்டலிக்கனல் உள்ளது. இந்த மூலாதாரத்தை அடையும் கும்பகக் காற்றை குண்டலிக்கனலோடும் ஓம்கார மந்திரத்தோடும் கலந்து முதுகு தண்டிலுள்ள சுழிமுனை நாடி வழியாக யோகியர் ஏற்றுவர். கும்பித்த காற்றும் குண்டலி சக்தியும் ஓம்கார மந்திரமும் கலந்த கலவைக்கு "வாசி" என்று பெயர். அவ்வாறு ஏறும் வாசியானது ஆறு ஆதாரங்களைக் கடந்து உச்சித் துளையைத் திறந்து கொண்டு தலைக்கு மேலுள்ள "திரயோதசம்" எனப்படும் பதின் மூன்றாவது நிலையை அடையும். அதற்கு "மதிமண்டலம்" என்று பெயர். வாசியானது அதையும் கடந்து சென்றால் யோக சித்தி பெறமுடியும். அவ்வாறு யோகசித்தி பெற்றவர்கள் மரணத்தை வென்றவராவர். இதனைத் தாயுமானவர்,

**"கால்பிடித்து மூலக்கனலைமதி மண்டலத்தின்**
**மேல்எழுப்பில் தேகம் விழுமோ? பராபரமே"**

என்று பாடுகிறார். இங்குக் குள்ளச்சாமி சுவரைச் சுட்டிக் காட்டியதற்குப் பொருள் மேற்கண்ட வாசி யோகத்தில் ஆழ்ந்து பொறிபுலன்களை ஒடுக்கி வானத்தின் உச்சிக்குச் செல்வதாகும். அவ்வாறு யோக சித்தி பெற்றால் சூரியனின் பிம்பம் கிணற்றுக்குள் தெரிவது போல இறைவன் யோகியின் உள்ளே காட்சியளிப்பான் என்பதாகும். குள்ளச்சாமியின் மூலம் இந்த உண்மையைப் புரிந்து கொண்ட பாரதியார் குள்ளச்சாமியின் தரிசனத்தைப் போற்றிப் பாடுகின்றார்.

வேறொரு நாளில் குள்ளச்சாமி தம்முதுகில் பழங்கந்தை மூட்டையைச் சுமந்து கொண்டு தெருவில் எதிரே வரக் கண்டார் பாரதி. அவர் குள்ளச் சாமியை நெருங்கிச் சென்று, "மூட்டைசுமந்திடுவதென்னே? மொழிவாய்" எனக் கேட்டார். அதற்குக் குள்ளச்சாமி உரைத்த பதிலுரையை மகாகவி பாரதி கவிதை மூலம் வடித்துக் காட்டுகின்றார்.

**"புன்னகைபூத் தாரியனும் புகழுகின்றான்**
**புறத்தேநான் சுமக்கின்றேன் அகத்தி னுள்ளே**
**இன்னதொரு பழங்குப்பை சுமக்கின்றாய் நீ**
**என்றுரைத்து விரைந்தவனும் ஏகிவிட்டான்**
**மன்னவசொற் பொருளினையான் கண்டு கொண்டேன்**
**மனத்தினுள்ளே பழம்பொய்கள் வளர்ப்ப தாலே**
**இன்னலுற்ற மாந்தரெலாம் மடிவார் வீணே**
**இருதயத்தில் விடுதலையை இசைத்தல் வேண்டும்"**

பற்றுக்களை விட்டொழிந்த குள்ளச்சாமி பரவசத்தில் மிதக்கின்றார். பற்றுக்களை விடாததால் மக்கள் எல்லாம் மனத்தில் குப்பையைச் சுமந்து திரிகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்ட பாரதி எல்லாரும் பற்றுக்களை விட்டு விடுதலை கீதம் இசைக்க வேண்டும் எனக் கூறுகின்றார். குள்ளச்சாமியிடம் பாரதி பெற்ற இரு பெரும் அனுபவங்கள் அவரை பலவித மாற்றங்களுக்கு உட்படுத்தி ஞானம் விளைத்தது என்றால் அது மிகையாகாது.

பாரதி, குள்ளச்சாமி எடுத்துக் காட்டிய குறிப்புக்களாலும் உபதேச மொழிகளாலும் தெளிவு பெற்று அவருடைய மலர்த்தாளை நோக்கி இன்பம் எய்தினார். அவரை, "மலர்த்தாளான் மாங்கொட்டைச் சாமி வாழ்க" என வாழ்த்தி கவிதையை நிறைவு செய்கிறார்.

**கோவிந்தசாமி தரிசனம்**

ஞானிகள் வெள்ளை உள்ளம் படைத்த மனிதர்களை நாடி வந்து உரையாடுவார்கள்; உறவாடுவார்கள்; அவர்களுக்கு உபதேசமும் செய்வார்கள். மகாகவி பாரதி குழந்தை உள்ளம் படைத்த கோமகன் ஆவார். அதனால் தான் கந்தை சுற்றியும் சிறுவர்களோடும் நாய்களோடும் தெருவில் விளையாடித் திரிந்த ஞானியாகிய குள்ளச் சாமி பாரதியை நாடி வந்தார்.

***பாலரொடு பேயர் பித்தர்***
***பான்மையென நிற்பதுவே***
***சீலமிகு ஞானியர்தம் செய்கை பராபரமே***
***(778)***

என்று ஞானியர்களின் மனப்பாங்கைத் தாயுமானவர் பாடுகின்றார். அந்த வகையில் வாழ்ந்த ஞானியாகிய கோவிந்த சாமி என்பவரைப் பாரதியார் தரிசனம் செய்திருக்கின்றார். இவரும் புதுவை நகரில் வாழ்ந்தவராவார்.

***"அன்பினால் முத்தியென்றான் புத்தன் அந்நாள்***
***அதனை இந்நாட் கோவிந்த சாமி செய்தான்***
***துன்பமுறும் உயிர்க்கெல்லாம் தாயைப் போலே***
***சுரக்குமரு ளுடையபிரான் துணிந்த யோகி***
***அன்பினுக்குக் கடலையுந்தான் விழுங்க வல்லான்***
***அன்பினையே தெய்வமென்பான் அன்பே யாவான்***
***மன்பதைகள் யாவுமிங்கே தெய்வம் என்ற***
***மதியுடையான் கவலையெனும் மயக்கம் தீர்ந்தான்."***

என்று கோவிந்த சாமி குருவினை மகாகவி பாரதியார் அறிமுகம் செய்கின்றார். ஞானநிலை எய்தப் பெற்றவர்கள் அன்பு மயமாகத் திகழ்வர். அவர்கள் உலகிலுள்ள உயிருள்ள - உயிரற்ற அனைத்துப் பொருள்களிலும் தெய்வம் இருப்பதை உணர்வார்கள். அந்த நிலைக்கு ஒருவர் உயர்ந்து விட்டால் இறைவனோடு இரண்டறக் கலக்கும் இன்ப நிலை தானே வந்து எய்தும். அதைத்தான் பாரதி மேற்கண்ட பாடலில் இறுதி இரண்டு வரிகளில்,

***"மன்பதைகள் யாவுமிங்கே தெய்வம் என்ற***
***மதியுடையான் கவலையென்னும் மயக்கம் தீர்ந்தான்'***

எனப் பாடுகிறான். ஒருநாள் குரு கோவிந்தசாமி, பாரதியாரின் இல்லத்திற்கு வந்தார். அவரை வரவேற்று வணங்கிய பாரதிக்கு அவருடைய இறந்து போன தந்தையார் சின்னச்சாமி ஐயரின் வடிவத் தினராய்த் தன்னைக் கோவிந்தசாமி காட்டியருளினார். அது மட்டுமல்லாமல் பாரதியின் அன்னையார் இலட்சுமி அம்மாளாகவும் மாறிக்காட்சி வழங்கினார். தெய்வ நிலைக்கு உயர்ந்த பற்றற்ற ஞானியரால் தான் இத்தகைய அருள் விளையாட்டுக்களை இயற்ற முடியும். பாரதி பெற்ற இந்த அனுபவப் புதுமைகளைப் பைந்தமிழ்ப் பாவாக வடித்துக் காட்டுகின்றார்.

***"பொன்னடியால் என்மனையைப் புனித மாக்கப்***
***போந்தானிம் முனியொருநாள் இறந்த எந்தை***
***தன்னுருவங் காட்டினான் பின்னர் என்னைத்***
***தரணிமிசைப் பெற்றவளின் வடிவ முற்றான்***
***அன்னவன்மா யோகியென்றும் பரம ஞானத்***
***தனுபூதி யுடையனென்றும் அறிந்து கொண்டேன்***
***மன்னவனைக் குருவெனநான் சரண டைந்தேன்***
***மரணபயம் நீங்கினேன் வலிமை பெற்றேன்.'***

கோவிந்தசாமி ஐயனின் பாதங்களைப் பணிந்து குருவாக ஏற்றுக் கொண்ட பாரதியின் தவப்பயன் இறையருளால் வாய்க்கப் பெற்றதாகும்.

***யாழ்ப்பாணத்துச் சாமி***

புதுவை மாநகரில் வாழ்ந்த மற்றுமொரு மகான் யாழ்ப்பாணத்துச் சாமி ஆவார். அவரை பாரதியார் கடவுளுக்கு நிகராக வைத்துப் போற்றுகின்றார். அவரைப் பற்றிப் பாடுகையில்,

***"கோவிந்த சாமிபுகழ் சிறிது சொன்னேன்***
***குவலயத்தின் விழிபோன்ற யாழ்ப்பா ணத்தான்***
***தேவிபதம் மறவாத தீர ஞானி***
***சிதம்பரத்து நடராஜ மூர்த்தி யாவான்***
***பாவியரைக் கரையேற்றும் ஞானத் தோணி***
***பரமபத வாயிலெனும் பார்வை யாளன்***
***காவிவளர் தடங்களின் மீன்கள் பாயும்***
***கழனிகள்சூழ் புதுவையிலே அவனைக் கண்டேன்"***

என்று பாரதி துதித்துப் பாடுகின்றார். யாழ்ப்பாணத்துச் சாமியைப் பாரதியார், சிதம்பர நடராச மூர்த்தியைப் போன்றவர் எனக் கூறுவதும், 'பாவியரைக் கரையேற்றும் ஞானத் தோணி' எனப் பாடுவதும் இங்கு நோக்கத்தக்கது.

யாழ்பாணத்துச் சாமியைக் குருவாக ஏற்று அவருடைய உருவத்தைத் தங்கத்தால் பதுமை செய்தும் பாதரசத்தைக் கட்டி இரசலிங்கம் செய்தும் அவற்றை யாழ்ப்பாணத்துச் சாமியாகப் பாவித்துப் பூசை செய்து வந்த நிகழ்வை பாரதியார்,

***"தங்கத்தாற் பதுமை செய்தும் இரத லிங்கம்***
***சமைத்துமவற் றினிலீசன் தாளைப் போற்றும்***
***துங்கமுறு பக்தர்பலர் புவிமீ துள்ளார்"***

எனக் கவிதை இசைக்கின்றார். யாழ்பாணத்துச் சாமியின் அருள் பார்வை பாரதியாருக்கு மங்களத்தை வழங்கிக் கொண்டு இருந்ததாகவும் அவர் பாடுகின்றார். பழுத்த ஞானியரின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கும் மாந்தர்கள் இந்தப் புவியில் ஏராளமானோர் உண்டு. மனப்பக்குவம் கொண்ட கருணையாளர்க்கு அந்தக் கொடுப்பினை அமையும் ஞானிகளின் வரப்பிரசாதம் பெற்றவராக மகாகவி பாரதியார் விளங்கியதால்தான் குள்ளச்சாமி, கோவிந்தசாமி, யாழ்ப்பாணத்துச் சாமி ஆகிய முப்பெரும் ஞானியரைத் தரிசிக்கும் பேறும் குறிப்பினால் உணர்த்திய தத்துவங்களை விளங்கிக் கொண்டு தண்டமிழ்க் கவிதை மூலம் தரணிக்கு உரைக்கும் பக்குவமும் சித்து விளையாடல்களை நேரே கண்டு அனுபவிக்கும் பாக்கியமும் அவருக்கு வாய்க்கப் பெற்றன.

**முடிவுரை**

பாரதியார் கவிஞராக விளங்கிய தோடு மட்டுமல்லாமல் கவிதை உள்ளம் படைத்தவராக விளங்கினார். எந்த உள்ளத்தில் கருணை பொங்கித் ததும்புகின்றதோ அந்த உள்ளமே கவிதை உள்ளமாகும். சாதாரண மக்கள் கண்களுக்குப் பித்தர்களைப் போலவும் பேய் பிடித்தவர்களைப் போலவும் காணப்படும் ஞானியர்கள், அதே அலைவரிசையில் இயங்கும் கருணையாளரைக் கண்டால் நெருங்கி வந்து அருள்தரிசனம் தந்து அநுக்கிரகம் புரிவார்கள். மேற்கண்ட மூன்று ஞானியரின் தரிசனங்களும் பாரதியாருக்கு இந்த வகையில் அமைந்தவையேயாகும்.

தத்துவ வேட்கையுடைய பாரதிக்கு மகான்களின் தரிசனமானது மெய்யியல் வெள்ளமாகப் பெருக்கெடுத்துக் கவிதை வாய்க்கால்களின் வழியாக நாட்டம் கொண்ட தமிழ் நெஞ்ச வயல்களில் பாய்ந்து ஞான விளைச்சலை வழங்கிக் கொண்டிருக்கின்றது. ஞானச் சித்தர்களை நாமும் தரிசிக்கும் வண்ணம் செய்த பாரதி அந்த ஞானியரைப் போலவே நிலைத்து வாழ்வார் என்பது திண்ணம்.

**துணை நூற்பட்டியல்**


1. மகாகவி பாரதியார் கவிதைகள், பதிப்பாசிரியர். விகரு. இராமநாதன், நான்காம் பதிப்பு, நவம்பர், 1992, இந்து பப்ளிகேஷன்ஸ், முத்துக்கிருஷ்ணன் தெரு, தியாகராய நகர், சென்னை.
2. தாயுமானவரின் திருப்பாடல்கள், உரையாசிரியர். பேராசிரியர். அ. மாணிக்கம், முதல் பதிப்பு ஜூலை 1999, வர்த்தமானன் பதிப்பகம், 21, இராமகிருஷ்ணா தெரு, தியாகராய நகர், சென்னை.